நரசு ஸ்டுடியோஸ்

அளிக்கும்

"ஸ்ரீவள்ளி"

நடிகர்கள் :

சிவாஜி கணேசன் ... பத்மினி

டி. ஆர். மகாலிங்கம் ... ராகினி

இ. ஆர். சகாதேவன் ... சி. கே. சரஸ்வதி

ஜெ. பி. சந்திரபாபு ... பேபி உமா

வி. ஆர். ராஜகோபால் ... ஹெலன்

மற்றும் பலர்

பின்னணி பாடியவர்கள் :

டி. எம். சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பி. சுசீலா,
ஜிக்கி, ரத்னமாலா, ஏ. பி. கோமளா

இசையமைப்பு :

ஜி. ராமநாதன்

வசனம், பாடல்கள் :

தஞ்சை ராமையாதாஸ்

டைரக்‌ஷன் :

டி. ஆர். ராமண்ணா

தயாரிப்பு :

கே. வெங்கடேசன் M. A. எல். வெங்கட்ராமன்

ஸ்டுடியோ :

நரசு

ஒளிப்பதிவு டைரக்ஷன் ... கே. எச். கபாடியா
பாபுபாய் உதேசி

தந்திரக்காட்சி ஒளிப்பதிவு ... பாபுபாய் உதேசி

ஒலிப்பதிவு டைரக்ஷன் ... கே. ராமச்சந்திரன்

நடன அமைப்பு ... கே. என். தண்டாயுதபாணி பிள்ளை
பி. எஸ். கோபால கிருஷ்ணன்
டி. சி. தங்கராஜ்
வி. மாதவன்

உடை அலங்காரம் ... எம். ஜி. நாயுடு
ஏ. அங்குசாமி

ரீ ரிக்கார்டிங்

இசையமைப்பு ... சி. என். பாண்டுரங்கன்

ஆர்ட் டைரக்ஷன் ... கங்கா

ஸ்டில்ஸ் ... போட்டோ ஆர்ட் சென்டர்

மேக்கப் ... தனகோடி
ரெங்கசாமி

எடிட்டிங் ... ஆர். ராஜகோபால்

புரொடக்ஷன் மானேஜர் ... வி. நாராயணன்

உதவியாளர்கள் :

டைரக்ஷன் ... கே. ஷண்முகம்
பி. எம். மணி

ஒளிப்பதிவு .... ஏகாம்பரம்

ஒலிப்பதிவு ... என். வி. சேஷன்
எம். சியாம்பட்

எடிட்டிங் ... பி. கோபால்
டி. வி.ஷண்முகம்

மேக்கப் ... ஏ. கே. மோஹன்

சவுண்டு புராஸஸிங் ... மதராஸ் சினிலாபரெட்டரி

Recorded on Westrex Sound System

கேவாகலர் புராஸஸிங் பிரிண்டிங்

பிலிம் சென்டர், பம்பாய்.

கதைச் சுருக்கம்

திருமுருகனின் பக்தனாகவும், சிற்றூரின் அரசனாகவும் விளங்கிய நம்பிராஜன் வேட்டையாடச் செல்லுகிறான். ஒரு மானைப் பின்பற்றிச்சென்றபோது, வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியிலே ஒரு அழகான பெண் குழந்தையைக் கண்டெடுக்கிறான்.

குழந்தையை நாட்டுக்குக் கொண்டுவந்து, ‘வள்ளி’ என்ற பெயர் சூட்டி வளர்க்கிறான். வள்ளியும் இளம் வயதிலிருந்தே முருகன் மீது அளவு இல்லாத பக்தி பூண்டு வளருகிறாள். தக்க பருவமடைந்த வள்ளி, முருகனையே தனது மணாளனாக எண்ணி, தந்தையின் சொற்படி மற்றொருவனை மணக்க மறுக்கிறாள். வருத்தமுற்ற தந்தை, தனது குருதேவனின் சொற்படி வள்ளியைத் தினைப்புனத்திற்கு அனுப்பினான்.

தினைப்புனத்திற்கு வந்த வள்ளி, தோழிகளுடன் ஆடிப் பாடி ஆபலோட்டிக் கொண்டிருப்பதை நாரதர் காணுகிறார். அழகிற்சிறந்த வள்ளிக்கு முருகனே ஏற்ற மணாளன் என்று நாரதர்கூற, தன்னை மயக்கி மாலையிடயாராலும் முடியாதென்று கூறுகிறாள் வள்ளி. நாரதரோ, எப்படியும் தான் நினைத்ததை முடிப்பதாகக் கூறிச் சபதமிட்டு வெளியேறுகிறார்.

நாரதர், முருகன் கொலு வீற்றிருக்கும் கழுகாசலம் சென்று, தனது சபதத்தை முடிக்க, வள்ளியை மணம் முடிக்குமாறு முருகனிடம் கூறுகிறார்.

முருகன், வேட உருவங்கொண்டு, மானைத்தேடி வந்தவர் போன்று, தினைப்புனத்தில் நுழைந்து, வள்ளியைச் சந்தித்தார். விடாமல் முருகன் அவளைத் தொடர்ந்து செல்லும்போது, வள்ளியின் தந்தையும், அண்ணன்மாரும், வந்து விடவே, வேங்கை மரமாக மாறி விடுகிறார்.

ஆனால் மரம், மறுபடியும் வேடனாக உருவெடுக்கிறது. தோழிகளால் வெளியே தள்ளப்பட்ட வேடனை, நாரதர் சந்தித்து முருகனைக் கிழவனாகச் செல்லுமாறு வேண்டுகிறார்.

கிழவனாக மாறி வந்த முருகனை, நம்பி பெரிய ஞானி என்று நினைத்துத் தனது மகளான வள்ளியிடம் அறிமுகப் படுத்தி விட்டுச்செல்கிறான். கிழவன் தேனும் தினைமாவும் உண்ணும் போது ‘விக்கல்’ எடுத்துத் தண்ணீர் வேண்டுமென்று கூறுகிறான். வள்ளி சுனைக்கு அழைத்துப் போகிறாள். வேண்டுமென்றே தண்ணீர் குடிக்கும் போது தவறி சுனையில் விழுந்து விடுகிறான் கிழவன். வள்ளியையும் தண்ணீரில் இழுத்துத் தள்ளுகிறான். தாகம் தணிந்து விட்ட தனக்கு வள்ளியின் மீது ஏற்பட்ட மோகம் தணியவில்லை என்று கூறுகிறான். வள்ளியின் கைரேகை மூலமாகத் தன் கல்யாண விஷயத்தை அறிய ஆசைப்பட்ட இடும்பன், கிழவனை ஜோஸ்யனென்று நம்பி, அவனிடம் கைகாட்டுமாறு வள்ளியை வற்புறுத்துகிறான்.

ஜோஸ்யம் பார்க்கும் கிழவன், வள்ளியை ஒரு ‘கிழவன்’ மணக்கப்போகிறான், என்று கூறுகிறான். புகழ் வாய்ந்த மனிதனுக்கு எதிரியாகப் பொறாமையுள்ளவன் இருப்பது, “யானைக்கே

எதிரியாக" என்று உவமை சொல்லும்போது, யானை என்ற சொல்கேட்டு வள்ளிமுதல் அனைவரும் பயந்து ஒளிந்து கொள்கிறார்கள். அதன் மூலமாக 'யானை' என்றால் வள்ளிக்குப்பயம் என்பதைக் கிழவன் தெரிந்து கொள்ளுகிறான்.

கிழவனை நாரதர் சந்தித்து, முருகன் தனது அண்ணனை விநாயகனை மறந்து வந்ததாலேயே இத்தகைய குற்றம் நேருவதாகக் கூறவே; முருகன் அண்ணனைத்துதிக்க, விநாயகர் தோன்றுகிறார். அவரிடம் தன் தவறை மன்னிக்குமாறு கூறி, யானையாக மாறிவர வேண்டுகிறார்.

யானை, அண்ணன்மாரையும், வள்ளியையும் துரத்துகிறது. தனித்து துரத்தப்பட்ட வள்ளி கிழவனிடம் ஓடி வந்து காப்பாற்ற வேண்டுகிறாள். கிழவன் தன்னை மணந்து கொள்வதாகச் சொல்லச் சொல்கிறான். வள்ளி முதலில் சம்மதிக்கிறாள். யானை போய்விட, கிழவனை மணக்க மறுக்கிறாள். ஆனால் கிழவன் மறுபடியும் யானையை வரவழைக்கிறான். வள்ளி முருகனைத்தவிர வேறு யாரையும் மணக்க முடியாதென்கிறாள். கிழவன் யானையிடம் வள்ளியைத்தூக்கி மலைஉச்சி ஒன்றிலிருந்து எறியச்சொல்லுகிறான். கண்விழித்த வள்ளி முருகனைக்கண்டு வணங்குகிறாள். அதற்குள் நம்பியின் குரல்கேட்கவே மறைந்த முருகன் அசரீரியாக, தக்க சந்தர்ப்பத்தில் அவளை மணப்பதாகக் குரல் கொடுக்கிறான். வந்த நம்பியும், கதிர் முற்றிவிட்டதாகக்கூறி வள்ளியை அழைத்துச் செல்கிறான்.

வள்ளி, முருகன், தன்னை மணக்கப்போவதைக் கூறியும் அரசன் நம்பவில்லை. குருதேவரின் சொற்படி முருகன் சந்நிதானத்தில் வள்ளி, முருகனை எண்ணி உருகுகிறாள். அச்சமயத்தில் முருகன் காட்சி தருகிறார். வள்ளி முருகன் வந்து விட்டதாக காட்டுகிறாள். ஆனால் நம்பி அரசனுக்கும், மற்றவருக்கும், முன்பு வந்த கிழவனாக காட்சியளிக்கிறார்.

படுக்கையறையில் துடித்துக் கொண்டிருக்கும் வள்ளிக்கு, மீண்டும் முருகனின் குரல்கேட்க, முருகனின் வேல் தோன்றி வள்ளியை வெளியே அழைத்துப்போகிறது. அதைக்கண்டு, நம்பி வள்ளியைத் தடுக்கிறான். கட்டுமீறிவிட்ட வள்ளியை சிறையிலிட உத்தரவிடுகிறான்.

சிறையில் வாடும் வள்ளி, முருகனை எண்ணிப்புலம்புகிறாள். வள்ளியை நோக்கி வந்த ஒளி முருகனாகமாறி வள்ளியைச் சிறையினின்று அழைத்துச்செல்கிறது. நம்பி வள்ளி இல்லாதது கண்டு கோபமுற்று போர் தொடுக்கிறான். அதனால் சினங்கொண்ட முருகன் விஸ்வரூபம் அடைகிறார்......

மற்றவை வெள்ளித்திரையில் !

ஸ்ரீ வள்ளி

பாடல்கள்

1

பாடியவர்:
ஜிக்கி, கோரஸ்

ஓ...ஓ...ஓ...
மலைநாட்டுக்குறவர் நாங்க—வில்லைக்
காட்டும் குறவர் நாங்க—பெண்
வேட்டையாட வரும்
காட்டுப் பூச்சிகளை
விரட்டும் ஜாதி தாங்க... (மலை)

கண்ணை காட்டுனா கன்னத்தில் கொடுப்போம்
கையை நீட்டுனா கண்ணைகளை தொடுப்போம்
பொன்னை காட்டுனா பொடரியில் கொடுப்போம்
உண்மைக் காகவே உயிர் கொடுக்கும்... (மலை)

கற்பைக் காக்கவே துணிந்த ஜாதிங்க
கவரி மான்போல் வளர்ந்த ஜாதிங்க
அற்பமாகவே நெனைச்சுடாதிங்க
அழகைப் பார்த்தவுடன் அசந்திடாத... (மலை)

வலிய சண்டைக்கும் நெருங்கிட மாட்டோம்
வந்த சண்டைக்கும் பயந்திட மாட்டோம்
மலையைக்கெல்லி எலி புடிச்சிடமாட்டோம்
மானத்தையே விட்டு கொடுத்திட மாட்டோம்
நாளும் வேடர்குலம் தழைக்க வேணும்—நம்ம
நாடு காடுகளும் செழிக்க வேணும்—எங்கள்
நம்பிராஜன் புகழ் ஓங்கவே—குறிஞ்சி
நாதன் பாதமே நம்பி வாழும்... (மலை)

2

பாடியவர்:
சுசீலா, கோரஸ்

எட்டாத கனிமேலே கொட்டாவி விட்டானும்.. ஹ...ஹ...
—முடவன்...ஹ...
கிட்டாத தேன்மேலே வட்டாரம் போட்டானும்
ஆ...ஆ... ஆ...ஆ...

அதைப்போலே.

வந்தாங்க மாப்பிள்ளேங்க
வானரம் போல—குறத்தி
வஞ்சி பெண்ணேயே மயக்கி (வந்த)

மாலையை போட.

வாயாடி வீரன் வளேஞ்சி ஓடவே
ஆ...ஆ...ஆ...ஆ...
வயது சென்ற கிழம் தள்ளாட்டம் போடவே
வரட்டுப் பாவலன் வாயையும் மூடவே
தானனே தன்னனே தானனே தன்னனே
மரியாதை இழந்தாரே வீண் மதியாலே (வந்தா)

கண்ணே இல்லாதவன் காட்சியை பாக்குருன்
ஆமா பாக்குருன்
காதே இல்லாதவன் கானத்தை கேக்குருன்
ஆமா கேக்குருன்
ஒண்ணுமே இல்லாதவன் ஊரையே ஏய்க்கிருன்
உதவாத ஆணெல்லாம் ஏன் வலே வீசுருன்
ஏன் வலே வீசுருன்
பெண்ணுலே வீரம்
பொங்கும் நாட்டிலே
புரியாமல் அறியாமல்

ஆசையினுலே
வந்தாங்க மப்பிள்ளேங்க
வானரம் போலே
குறத்தி வஞ்சி பெண்ணேயே
மயக்கி மாலேபோட
வந்தாங்க மாப்பிள்ளேங்க. (வந்தா)

3

பாடியவர்:
சுசீலா, கோரஸ்

வ: ஆலோலம்...ஆலோலம்...ஆலோலம்...ஆலோலம்
சோ...

கூட்: ஓ...ஓ...ஓ...ஓ...
சோ...சோ...சோ...

வ: சின்னஞ்சிறு குருவிகளா
சிங்கார பறவைகளா
வண்ணமிகும் தினேக்கதிரை நாடாதீர்
கன்னங்கருங்குயிலே—இந்த
கானகத்தில் ஒயிலாய் வந்து
கவணடியும் வாங்காதே
ஆலோலம்...ஆலோலம்...ஆலோலம் (சின்னஞ்)

ஆறுமுக நாதன்
குறவர் குலம் பெருமையுற (உன)

அன்றொரு நாள் குட்டி ப்ரமனை சிறை செய்து
ஆக்கும் தொழில் புரிந்த மறைவேதன்
குன்றமர்ந்தே அன்று
குருபரனாய் நின்று
தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதன்—தந்தை
சத்ரு ஸம்ஹாரன்—பக்தர் உபகாரன்
திருமணமே—புரிந்திடவே...... (உன)

5

பாடியவர் :

டி. ஆர். மகாலிங்கம்

(நாரதர்)

கற்பக சோலையிலே
கற்பக சோலையிலே—தேன்
கனி ஒன்று கனிந்ததடா—முருகா
அற்புத சிருஷ்டியிலே—ஆ...ஆ...
அற்புத சிருஷ்டியிலே—பிறந்த
அறுசுவை அமுதமடா—முருகா
அறுசுவை அமுதமடா—முருகா
கற்பக சோலையிலே

அறுபடை வீட்டினிலே முருகா—ஆ...முருகா
அறுபடை வீட்டினிலே—என்றும்
அமர்ந்திடும் ஜோதியடா—முருகா
அறுபடை வீட்டினிலே—என்றும்
அமர்ந்திடும் ஜோதியடா
விற்பனர் மரபினிலே—பிறந்த
வேடுவர் திலகமடா
முருகா...முருகா...முருகா...முருகா...
ஆறு பெண்கள் பாலை
அமுதாகவே உண்ட ஐயனே
அருள் மெய்யனே
முருகையனே
எமக்காரும் துணையில்லை துய்யனே
அருமறை போற்றிடும்
குருபரனே—அருள்
வேலனே அம்மை பாலனே
தந்தைக்கு அந்நாளில்
மந்திரம் ஓதிய தாரகா
எழில் தாயகா மறை நாயகா
எங்கள் சரவணபவகுக ஷண்முகா
தேடும் அன்பர் உள்ளம்
நாடும் ஞானகுரு தேசிகா
செந்தில் வேல் குகா (கற்)

தந்தான தான தனதன
வந்தாடும் மாமயில் வாகன

கந்தா உன் சேவை பணிந்திடவே
பால் காவடியுடனே
வந்தோம் எமை ஆண்டருள்வாய் குருவே
தத்திமி தத்திமி நாதம் முழங்கிட
சித்தர் மருத்துவ கீதம் விளங்கிட
தணிகாசல மேவிடும் வேலப்பா
உனையன்றியே உலகில்
இனிமேலும் துணை தான் யாரப்பா
எல்லாம் உனது செயல் வேலா—எம்மை
ஆண்டருள்வாய் சிவபாலா

கோரஸ்: எல்லாம் உனது செயல் வேலா
எம்மை ஆண்டருள்வாய் சிவபாலா
நல்லோர் பணியும் மறை நூலா—உனை
நாடிய வரமருள் மேலா

கோரஸ்: எல்லாம் ஜெகமெல்லாம்
உனது செயல் வேலா
செந்தி நகரிலோர் ஆண்டி—பக்தர்
தேடிய போதெல்லாம் அவன் வருவாண்டி
அந்திப்பகலாக வேண்டி—வந்தால்
யாருக்குமே அவன் வரம் தருவாண்டி—செந்தில்
ஆனைமுகன் தம்பிதாண்டி—அவன்
அப்பனும் எப்பவும் அலையும் பேயாண்டி
வானோர் புகழ் வேலன்தாண்டி—நேரில்
வந்தாலும் கண்ணில் காணாத மாயாண்டி—செந்தில்

மோஹனப் புன்னகையில்—எனக்கொரு
மோஹம் பிறக்குதடா—முருகா
ஆகமம் போற்றுதடா—முருகா
ஆவலும் மீறுதடா
ஆடும் மயில் மீதே விளங்கும்
ஆனந்த ஜோதியடா—முருகா
அன்பர் இதயமடா—உனக்கு
அறுபடைக் கோயிலடா (அன்பர்)

சித்தம் இரங்கி வருவாய் அன்பர்கள் தொழும்
தென்பழனி வேல்முருகா
சக்தி சிவன் புத்திரனே சதுர்மறை வித்தகனே
உத்தரவு தரவேணும் உந்தனருள் பெறவேணும்
கோரும் வரமே தருவாய் அன்பர்கள் தொழும்
குன்றக்குடி வேல்முருகா
ஏறுமயில் ஏறிவந்து நேரினில் மனம் மகிழ்ந்து
ஆறுதலையோடு வந்து ஆறுதலும் சொல்லவேணும் (சி)

பாலாபிஷேகம் பெறுவாய் அன்பர்கள் தொழும்
பரங்கிரி வேல் முருகா
காலால் துணிந்து அந்த காலனை உதைத்தவனின்
பாலா மனமிரங்கி பக்தர்களைக் காக்கவேணும் (சி)

முருகா....சண்முக...வேல்....வேல்...
எட்டடி குச்சுக்குள்ளே—கந்தய்யா
எத்தனை நாள் இருப்பேன்
ஏழைமுகம் பாரும்—புள்ளிமயில்

ஏறிடும் வேலவனே
சக்தி சிவன் பாலா—வந்தருள்
சண்முகனே வேலா
பக்தியுடன் பணிந்தோம்—முருகா
பாராமுகம் ஏனோ
எட்டுத்திசை மகிழ ப்ரமனை
குட்டி சிறையிலிட்டாய்
துஷ்டர்களை வதைத்தே—பழமுதிர்
சோலை அமர்ந்தவனே
ஏழை மனங்குளிர—வந்தருள்
எம்பெருமான் மகனே—திரு
மாலின் மருகோனே—திருத்தணி
மலையின் வேலவனே

6

பாடியவர் :

டி .எம். சௌந்திரராஜன்

(முருகன்)

ஆதியந்தமும் இல்லாத நாய்கா—ஆ...ஆ...ஆ...
ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா
ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா
ஜோதி தவழும் வேதாந்த ப்ரம்மமே
தூய ஞான ஒளி தீபமே
ஜோதி தவழும் வேதாந்த ப்ரம்மமே
தூய ஞான ஒளி தீபமே
நாதரூபமே....ஆ....ஆ...ஆ...
நாத ரூபமே ஓம் சிவாயமென
நவிலும் ஓங்காரமே
அம்பிகை மகிழும் தேவா
அன்பர்கள் இதய ஜீவா
அம்பிகை மகிழும் தேவா
அன்பர்கள் இதய ஜீவா
ஆதாரமுன் பாதாரமே
அமைதி நிலவும் ஆனந்த வாழ்வு பெற
ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா

7

பாடிவர் :

ஜிக்கி, கோரஸ்

மானைத்தேடி வந்தவரே
மாப்பிள்ளை சிங்கம்—மத
யானையை போலே நிக்காதே
மாப்பிள்ளை சிங்கம்

14

பாடியவர் :

பி. சுசீலா

தள்ளாடி தள்ளாடி
தள்ளாடி தள்ளாடி தையத்தா—போடும்
சுவாமிகள் போல் வந்த தகிடுதத்தா— (தள்ளாடி)

சல்லாப கிழம் நல்ல அறிவுத்தான்
சல்லாப கிழம் நல்ல அறிவுத்தான் பெண்கள்
சபலத்தில் அதுகொஞ்சம்—குறைவுத்தான் பெண்கள
சபலத்தில் அதுகொஞ்சம் குறைவுத்தான் (தள்ளாடி)

15

பாடியவர் :

சீர்காழி கோவிந்தராஜன்

விக்ன விநாயகா விரும்பும் உன் அடியார்கள் வினை
—தீர்த்திடும் தாயகா

பொற்குலக்கொடி ஒன்று புனத்தினில் தவழ்ந்து
ஐம்புலனையும் கவர்ந்து நின்றாள்
சற்குருவான என் தமையனே அன்று உனை சரண்புகாதென்
—குற்றமே
தக்கதோர் தருணத்தில் சமய சஞ்சீவியென தயைபுரிய ஓடி
—வாராய்

அண்ணா...அண்ணா...

16

பாடியவர் :

பி. சுசீலா

காளான் குடைபிடிக்க கட்டெறும்பு மேளங்கொட்ட
ஏலாத கிழமே நீ என்னை வந்து தாலி கட்ட முடியுமா
ஏய்ச்சுப்புட்டேன் நான் ஏய்ச்சுப்புட்டேன் உன்னை
ஏமாற வச்சுட்டேனே தாத்தா—
சரி போகட்டுண்ணு விட்டுப் பாத்தா—பசி
தாகத்தையும் நான் தீத்தா—இளம்
பெண்ணாளையே—கிழட்டு
கண்ணாலே பார்த்துக்கிட்டு
கிண்ணாரம் கொட்டுதடி ஆத்தா

17

பாடியவர் :

சீர்காழி கோவிந்தராஜன்

அஞ்செழுத்தான் கண்டதொரு
யானை முகத்தானும் வர
ஆறெழுத்தான் துணிஞ்சுவிட்டான்
அஞ்சாமல் தாலிகட்ட—தெரியுமா
ஏச்சுபுட்டேன் நான் ஏச்சுபுட்டேன்—உனை
ஏமாற வச்சுட்டேனே வள்ளி—

தாண்டிக்குதிக்காதே துள்ளி—வாய்
..க வீசாதே அள்ளி—சும்மா
..ாரம் பண்ணாதே ஒயிலாட்டம் போடாதே
..டான காளை இந்த புள்ளி (ஏச்சு)

18

பாடியவர் :

பி. சுசீலா

ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம் சரவணபவ
சண்முகா சக்தி வடிவேலா
கண்ணீரைக் காணிக்கை செய்தாலும் உன்மனம்
கரையாதோ கனிந்திடாதோ...ஓ...ஓ...கருணாநிதே
உன் கருணையே பிறந்திடாதோ...ஓ...ஓ...
இதய கோயிலிருக்க இங்கு நீ அமர்ந்தே
இருப்பதுதான் முறையாமா (இதயக்கோயில்)

ஏழையும் உன்னோடு வாழவே பிறந்தேன்
எண்ணமெல்லாம் கனவாமோ—முருகா...ஆ...ஆ...
ஏழையும் உன்னோடு வாழவே பிறந்தேன்
எண்ணமெல்லாம் கனவாமோ
இனியும் உன் நினைவாலே தனிமையினால் நெஞ்சம்
ஏங்கிடும் நிலை வரலாமோ
மரமாகி நின்ற அசுரனை அன்று
இருகூறு செய்த முருகா
மயிலாக சேவற்கொடியாக ஏந்தி
மகிழ்ந்தாடி வந்த முருகா
குறவர் எங்கள் குலத்தை—நாடி மானை
குலவ வந்த முருகா
குருபார எதிரில் ஒருமுறை வந்து
குறையைத் தீரும் முருகா...ஆ...ஆ...
உருவம் கல்லாக மாறிடினும்
உள்ளம் கல்லாக மாறுவதோ (உருவம்)

உருகாதா மனம் உருகாதா
முருகா...முருகா...முருகா...

19

பாடியவர் :

பி. சுசீலா

உன்னையே தெய்வமெனயெண்ணி வரும் மக்களும்
மண்ணிலே மடிவதும் சரியோ
பன்னிரு கரங்களால் அபயம் தராமலே
பாதகம் செய்வதும் முறையோ
கன்னி என் வாழ்விலே என்னையே அறியாமல்

என்னதான் நான் செய்த குறையோ
உன் அருள் இல்லையேல் கெதியாரும் இல்லை—என்
உயிரையும் ஏற்றுக்கொள் முருகா...
முருகா...முருகா...முருகா...

20

பாடியவர்:

வர். மகாலிங்கம்

சட ஞானப்பழமே....
ஞானப்பழமே....மெய் ஞானப் பழமே
ஞானப்பழமே....மெய் ஞானப்பழமே
நான்மறை புகழும் நாதா
நாளும் அருளும்... (ஞான)

கோரஸ்: சண்முகா...குகா....முருகா....
கானுைற வள்ளியும் குஞ்சரியும் மகிழ
காத்திருந்தோம் கதிர் வேல் முருகா

கோரஸ்: சண்முகா...குகா...முருகா...
கலைச்செல்வம் புகழ்ச் செல்வம்
சகல செல்வமும் தந்து கார்த்தருள்வாய்
சக்திவேல் ஷண்முகா

கோரஸ்: (ஷண்முகா) குகா...முருகா...

SHIVAJI PRINTERS, MADRAS-14: Phone 83425